# மடை

## பாரம்பரியக் கலைகளின் திருவிழா

25,26,27 – ஒக்டோபர்– 2013

சிவானந்த தபோவனம்,
உப்புவெளி வீதி,
திருகோணமலை.

ஏற்பாடு
இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்.

## "மடை" பாரம்பரிய கலைகளின் திருவிழாவும் பாரம்பரிய கலைகளின் கொண்டாட்டமும்

பேணப்படுவதற்கான பெருமிதங்களாக மட்டும் பாரம்பரியக் கலைகள் இருப்பதில்லை. பழம்பெருமைகளின் அடையாளங்களாக மட்டும் அவை காணப்படுவதுமில்லை.

நவீன காலத்திற்கு உகந்தது அல்லாததாகவும், நாகரிகம் அற்றதாகவும் பார்க்கப்படுவதிலும் அர்த்தம் இருப்பதில்லை.

உலகின் பன்மைத் தன்மையையும், பன்மைப் பண்பாட்டுச் சூழலையும் பன்னாட்டு நிறுவன மைய உலகமயமாக்கம விழுங்கி வருகின்றது. இத்தகைய சூழலின் எதிர்ப்புச் சக்திகளாக மக்கள் மத்தியில் இருந்து வருபவை பாரம்பரியக் கலைகளே ஆகும்.

பாரம்பரியக் கலைகள் சமுதாயமயப்பட்டவை. சமூகப் பங்கேற்பிலும் பங்களிப்பிலும் உருவாகுபவை. சமுதாய ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதிலும், கொண்டாடுவதிலும் ஊடகமாக அமைபவை. உறவுகளை வளர்ப்பதிலும் வலுப்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்து வருபவை.

இத்தகைய சமுதாயமயப்பட்ட பாரம்பரிய கலைகள் சாதி, பால், வர்க்க ரீதியான ஆதிக்க கருத்துக்களின் காவிகளாக இருப்பதும் கண்கூடு. அதேவேளை ஆதிக்கங்களைக் கேள்விக்குட்படுத்தும் பண்புகளை உடையனவாக அவை இருப்பதும் அறியத்தக்கது.

மனிதர்கள் காலங்காலமாக எவ்வாறு சிந்தித்து வருகின்றார்கள் எத்தகைய திறன்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள், எவ்வாறான அனுபவங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பவை சாதாரணமான விடயங்கள் அல்ல.

இவை ஆதிக்கங்கள் களைந்த சகோதரித்துவம் நிறைந்த மனித சமூகங்களின் உருவாக்கங்களுக்கு அடிப்படையானவை. மனிதர்கள பாவனையாளர்கள் என்கின்ற நிலைமையில் இருந்து படைப்பாளர்கள் என்கின்ற நிலையைப் பேணிக்கொள்வதற்கு ஆதாரமாக இருப்பவை.

சுய சிந்தனைகளுக்கும் சுய தீர்மானங்களுக்கும் இடம் மறுக்கப்பட்ட அதிநவீன வாழ்க்கைப் போக்கின் கட்டறுத்த வேகமே அபிவிருத்தி என மயக்கம் கொண்டிருக்கும் சூழலின் மயக்க நீக்கிகளாக பாரம்பரிய கலைகளின் பயில்வுகள் காணப்படுகின்றமை விளங்கி கொள்ளப்பட வேண்டியது.

இத்தகைய நிலைமைகளையும் நிலைப்பாடுகளையும் அறிவுபூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் முன்னெடுக்கப்படுவதன் முக்கியத்துவம் மிக்க நிகழ்ச்சியாக "மடை" பாரம்பரிய கலைகளின் திருவிழாவும் பாரம்பரிய கலைகளின் கொண்டாட்டமும் அமைகின்றது.

சி. ஜெயசங்கர்


'මදාසි'
රංගනයන් ! ප්‍රදර්ශන !! සාකච්ඡා !!!
සැප්තැම්බර් 25, 26 හා 27, 2013
පෙ.ව. 9.00 සිට ප.ව. 10.30 දක්වා

# 'Madai'

**Festival of Traditional Arts and Celebration of Traditional Artists**
**Celebration of the Arts of the Heart and the Roots!**

Performances! Displays!! Interactions!!!

**On 25th, 26th and 27th October 2018**
**from 09.00 a.m. to 10.30 p.m.**
**at**
**Sivanandha ThabovanamUppuveli Road,Trincomalle**

Traditional art forms

makudi koothu, koothini, kaman koothu, thappu, udukka, parai,karagam/kumbham, polladi, kalyaga, vasanthan, performances of veddhas, folk songs and dances, burgher music, kaathavarayan koothu, ponnar sankar, silambam and more and more of its kind!

**Plus**

'Kalari' Traditional Theatre Construction, 'Madaalayam' traditional ritual architectural construction and Thoranam - traditional decorative construction!!

**And**

Two hundred traditional artists from all over Sri Lanka will illuminate this festival with their energy of mastery in their arts!!!

'Madai' is an offering of the communities for the communities!!!

A program of Dept. of Hindu Cultural Affairs

# மடை

பாரம்பரியக் கலைகளின் திருவிழா

வேர்களதும் மனங்களதும் கலைகளின்
கொண்டாட்டங்கள்!

ஆற்றுகைகள்!

காட்சிப்படுத்தல்கள்!!

கலந்துரையாடல்கள்!!!

25,26,27 – ஒக்டோபர்– 2013

சிவானந்த தபோவனம்,

உப்புவெளி வீதி,

திருகோணமலை

மு.ப. 09.00 தொடக்கம் பி.ப 10.30 வரை

ஏற்பாடு : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

## முதலாம் நாள் 25.10.2013 வெள்ளிக்கிழமை

**மு.ப - 9.00 – 10.30 ஆரம்ப வைபவம்.**

**மு.ப 11.00 – பி.ப 01.00 முதலாம் அமர்வு**

- கலைஞர் அறிமுகமும், கலை அனுபவப் பகிர்வும்.

பி.ப 1.00 - பி.ப 01.55 மதிய உணவு இடைவேளை

**பி.ப 02.00 – பி.ப 04.00 இரண்டாம் அமர்வு**

- பாரம்பரிய கலைகள் பற்றிய அறிவுப் பகிர்வும், ஆற்றல், திறன், வெளிப்பாடும்

**மாலை நிகழ்வுகள் 01**

இடம்: ஓசி மைதானம்

மாலை 05.00 –மாலை 08.00

- 5.00 – 6.30 மட்டக்களப்பு மகிடிக்கூத்து
- 6.30 - 8.00 மலையக காமன் கூத்தும் பாரம்பரியக் கலைகளும்

**மாலை நிகழ்வுகள் 02**

இடம்: தபோவன வெளி

மாலை 05.30 –மாலை 07.00

- பறங்கியரின் கபறிஞ்சா, முஸ்லிம்களின் களிகம்பு, வாள்வீச்சு, சிலம்பாட்டம், களிகம்பு, பறைமேளக்கூத்து

**இரவு நிகழ்வுகள் 01**

இடம்: தபோவன மைதானம்

பாரம்பரிய நிகழ்துகலைகளின் ஆற்றுகைகள்

இரவு 8.00 –11.00

- 8.00 – 9.30 கோவலன் கூத்து
- 9.30 – 11.00 பப்பிரவாகன் கூத்து

**இரவு நிகழ்வுகள் 02**

இடம்: தபோவனம் சடங்குப் பந்தல் அருகில்

பாரம்பரிய நிகழ்துகலைகளின் ஆற்றுகைகள்

8.00 –11.00

- 8.00 – 9.30 – உடப்பு கலைஞர்களின் நிகழ்வுகள்
- 9.30 – 11.00 – மன்னார்மாலை

## இரண்டாம் நாள் 26.10.2013 – சனிக்கிழமை

**மு.ப 9.30 – பி.ப 12..30 முதலாம் அமர்வு**

- கலைப் பயில்வுகளும், சவால்களும், எதிர்கொள்ளல்களும்.

பி.ப 12.30 - பி.ப 1.25 மதிய உணவு இடைவேளை

பி.ப 01.30 – பி.ப 4.00 இரண்டாம் அமர்வு

- பாரம்பரியக் கலைகள்: பயில்வுகளும் புத்தாக்கங்களும்.

**மாலை நிகழ்வுகள் 01**

இடம்: ஓசி மைதானம்.

மாலை 05.00 – மாலை 6.30

- 5.00 – 6.30 மட்டக்களப்பு மகிடிக்கூத்து
- 6.30 - 8.00 மலையக காமன் கூத்தும் பாரம்பரியக் கலைகளும்

**மாலை நிகழ்வுகள் 02**

இடம்: தபோவன வெளி

மாலை 05.30 – மாலை 06.30

பறங்கியரின் கபறிஞ்சா, முஸ்லிம்களின் களிகம்பு, வாள்வீச்சு, சிலம்பாட்டம், பறைமேளக்கூத்து

**இரவு நிகழ்வுகள் 01**

இடம்: தபோவன மைதானம்

பாரம்பரிய நிகழ்துகலைகளின் ஆற்றுகைகள்

8.00 –11.00

- 8.00 – 9.30 – துரோணர் யுத்தம்
- 9.30 – 11.00 – காத்தவராயன் கூத்து

**இரவு நிகழ்வுகள் 02**

இடம்: தபோவனம் சடங்குப் பந்தல் அருகில்

பாரம்பரிய நிகழ்துகலைகளின் ஆற்றுகைகள்

8.00 – 11.00

8.00 – 9.30 மன்னார் மாலை - மன்னார் கலைஞர்களின் கலை நிகழ்வுகள்

9.30 – 11.00 முல்லைத்தீவு கலைஞர்களின் சிலம்புப் பாடல்

**மூன்றாம் நாள் 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை**

**முதலாம் அமர்வு மு.ப 09.30 – பி.ப 12.30**

- சடங்குகள் - பத்தாசிகள் - கலைகள்

பி.ப 12.30 - பி.ப 1.25 மதிய உணவு இடைவேளை

**இரண்டாம் அமர்வு பி.ப 1.30 – பி.ப 03.30**

- அண்ணாவியம், பனுவலாக்கம், வாத்தியக்கருவிகள் ஏற்றுதல் இணக்குதல், ஆடை – அணி - ஒப்பனை - அலங்காரங்கள்
- உரை :- பேராசிரியர் நஜிமுதீன்
  திருவனந்தபுரம் பல்கலைக்கழகம்
  கேரளா, இந்தியா.

நிறைவுவிழா மாலை 6.00

சகல பாரம்பரியக் கலைஞர்களும் தங்கள் ஆற்றுகைகளை நிகழ்த்திக் காட்டுதல்

## *திருமலை நகரில் "மடை" எனும் மகுடத்தில் நடைபெறவுள்ள "பாரம்பரியக் கலைகளின் திருவிழாவும், கலைஞர்களின் கொண்டாட்டமும்"*

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "மடை" எனும் பெயரில் ஆற்றுகைகளாகவும், காட்சிப்படுத்தல்களாகவும், கலந்துரை யாடல்களாகவும் இடம்பெறவுள்ள பாரம்பரியக் கலைகளின் திருவிழாவும் கலைஞர்களின் கொண்டாட்டமும் அடங்கிய நிகழ்வுகள் எதிர்வரும் 25,26,27.10.2013 வெள்ளி,சனி,ஞாயிறு ஆகிய மூன்று நாட்களுக்கு திருகோணமலை நகரத்தில் இடம்பெறவுள்ளது. பிரதான நிகழ்வுகள் அனைத்தும் உப்புவெளியில் உள்ள சிவானந்த தபோவனத்தில் நடைபெறும் அதேவேளை பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் ஆற்றுகைகள் சில உட்துறைமுக வீதியிலுள்ள இந்து கலாசார மண்டப வளாகத்திலும், நகரக் கடற்கரையிலும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்விற்கான எண்ணக்கரு வடிவமைப்பு கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்பாடுகள் யாவும் அவரது இணைப்பாக்கத்தில் செயற்படும் ஒழுங்கமைப்புக் குழுவினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையின் சகல பகுதிகளிலும் பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்கள் பல பயில் நிலையில் இருந்து வருகின்றன. பல்வகைப் பண்பாடுகளுடனும் பல்வகையான வித்தியாசங்களுடனும் இக்கலை வடிவங்கள் பயிலப்பட்டு வருகின்றன.இத்தகைய பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்களின் பயில்வு என்பது மிகப் பெரும்பாலும் பேணுகையாகவன்றி வாழ்தலுக்கான பயில்வாகவே நிகழ்ந்து வருகின்றதனைக் காணமுடிகின்றது.

வருடா வருடம் ஊரவரின் மகிழ்ச்சிக்காகவும் ஊரவர் ஒன்று கூடிச் செயலாற்றுவதற்காகவும் தத்தமது ஆற்றல்களைத் திறன்களை வெளிப் படுத்தி வளர்த்தெடுப்பதற்காகவும் ஊர் கூடி நடத்தும் கலைத்திருவிழாவாக பாரம்பரிய நிகழ்த்து கலைகள் மிகப் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய வாழ்தலுக்கான பாரம்பரிய கலைப் பயில்வுகள் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் பல்வகைத் தன்மைகளில் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்கள் மத்தியில் பயிலப்பட்டு வரும் பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்கள் பல சமூதாய கலை நிகழ்வுகளாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் எதிர் நோக்கும் நுகர்வுப்பண்பாட்டின் ஆபத்திலிருந்து எம்மை விடுவிப்பதற்கான பொறிமுறைகள் பல எம்மத்தியில் பயிலப்பட்டு வரும் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் இயங்கியலில் பின்னிப் பிணைந்துள்ளன.

இவ்வாறு தன்னளவில் முழுமையும் நிறைவும் கொண்டதாக பயிலப்படும் கலைகளில் சில அடையாளங் காணப்படாமல் உள்ள துரதிஸ்ட நிலையும் எம்மத்தியில் இருந்து வந்துள்ளது. அதேநேரம் பொதுப் புத்தியில் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் மனித வாழ்வியலுக்கான பயில்வின் இயங்கியல் பற்றிய அறிகை நோக்கு பிரதானப்படுத்தப்படாது மாறாக பேணுதலுக்கான அறிகை நோக்கே மிக முக்கியப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதாவது எமது அடையாளம், எமது பண்பாட்டின் சின்னம் அதற்காகப் பேண வேண்டும் எனுங் கருத்தியலே பிரதானப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இத்துடன் பாரம்பரிய நிகழ்த்து கலைகள் குறித்து உரையாடப்பட்ட மிகப் பெரும்பாலான உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பாரம்பரியக் கலைஞர்களின் குரல்கள் ஒலிப்பதற்கான வாய்ப்புக்கள் அமையவில்லை இதனாலேயே வாழ்வியலுக்கான பயில்வு பற்றிய அறிகை நோக்கு வலுவற்றுப் போனதுடன் தரகு அறிஞர்களின் பேணுகைக்கான அறிகை நோக்கு பிரதானப்படுத்தப்பட்டது.

இதேவேளை இலங்கைத் தமிழ்ச் சூழலில் 2002 இலிருந்து "கூத்து மீளுருவாக்கம்" எனுங் கோட்பாடு பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் வாழ்வியலுக்கான பயில்வின் இயங்கியலை ஓர் அறிகை நோக்காக முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் இலங்கையிலுள்ள பெரும்பாலான தமிழ் பேசும் சமூகங்கள் மத்தியில் பாரம்பரிய நிகழ்து கலைகளின் பயில்வில் ஈடுபட்டு வருகின்ற மூத்த தலைமுறைகளைச் சேர்ந்த கலைஞர்களும் இளைய தலைமுறைகளைச் சேர்ந்த கலைஞர்களும் சில நாட்கள் ஓரிடத்தில் ஒன்றிணைந்து தத்தமக்குத் தெரிந்த வித்தைகளை மற்றையோர் முன்னிலையில் வெளிப்படுத்தி தமது கலைப்பயில்வுகளின் சாத்தியப்பாடுகள், சவால்கள் குறித்து கருத்துக் களை வெளிப்படுத்தி கலந்துரையாடி விவாதித்து பிறருக்கு கொடுக்க

வேண்டிய தம் அனுபவங்களைக் கொடுத்து தாம் பிறரிடமிருந்து பெறவேண்டியதைப் பெற்று இந்த 21 ஆம் நூற்றாண்டில் ஆக்கபூர்வமாக இயங்குவதற்கான கருத்தியலை வலுவாக்கிக் கொள்ளும் பாரம்பரியக் கலைஞர்களின் ஊடாட்டக் களமாக இவ்விழா வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப மலையகத்திலிருந்து காமன்கூத்தும் அதனோடு தொடர்புபட்ட கலைஞர்களும், மட்டக்களப்பிலிருந்து மகிடிக் கூத்து, தப்பிசை, பறைமேளக்கூத்தும் அதனோடிணைந்த கலைஞர்களும், கபறிஞ்ஞா நடனமும் அதனோடிணைந்த கலைஞர்களும் கூத்து அண்ணாவிமார்களும், பத்ததிச் சடங்கு, வேடுவர் சடங்கு சார்ந்த கலைஞர்களும், மன்னாரிலிருந்து வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு முதலிய ஆற்றுகைகளும் அதுசார் கலைஞர்களும்.முல்லைத்தீவிலிருந்து கோவலன் கூத்தும் அதுசார் கலைஞர்களும், யாழ்ப்பாணத்திலிருந்து காத்தான் கூத்து, பப்பிரவாகன் கூத்தும் அதுசார் கலைஞர்களும் திருகோணமலையிலிருந்து கரகாட்டமும் அதுசார் கலைஞர்களும், அக்கரைப்பற்றிலிருந்து களிகம்பு, சிலம்பு, வாள்வீச்சு ஆற்றுகைகளும் அதுசார் கலைஞர்களும், உடப்பிலிருந்து பாரம்பரியக் கலைஞர்களும் வருகை தந்து இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

திருகோணமலையின் உப்பு வெளி எனும் இடத்திலுள்ள சிவானந்த தபோவனத்தில் **25,26,27.10.2013 வெள்ளி,சனி,ஞாயிறு** தினங்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 வரை கலந்தாய்வரங்குகளும், காட்சிப் படுத்தல்களும் நடைபெறவுள்ளன.

25.10.2013 வெள்ளிக்கிழமையும் 26.10.2013 சனிக்கிழமையும் மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரைக்கும் உட்துறைமுக வீதியிலுள்ள இந்து கலாசார மண்டப வளாகத்தில் மட்டக்களப்பு சந்திவெளிக் கலைஞர்களின் மகிடிக் கூத்து ஆற்றுகையும், மலையகக் கலைஞர்களின் காமன் கூத்து ஆற்றுகையும் இடம்பெறவுள்ள அதே வேளையில் நகரக் கடற்கரையில் பாரம்பரிய வாத்திய இசை, களிகம்பு, கபறிஞ்ஞா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இரவு 8.30 தொடக்கம் 11.30 வரை உப்பு வெளியிலுள்ள சிவானந்த தபோவன மைதானத்தில் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணக் கூத்துக்கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

துரை.கௌரீஸ்வரன்.

# நிகழ்வுகளும், நிகழ்வில் பங்குகொள்ளும் கலைஞர்களின் விபரத்திரட்டு

| மகிடிக்கூத்து – மட்டக்களப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ. இல | முகவரி |
| 1. | தம்பாப்பிள்ளை நடராஜா | மகிடிக்கூத்து கலைஞர் | 543274522v | சந்திவெளி. |
| 2. | கண்ணாயிரம் பாலிப்போடி | மகிடிக்கூத்து கலைஞர் | - | சந்திவெளி. |
| 3. | பத்தக்குட்டி கோணேஸ்பரன் | மகிடிக்கூத்து கலைஞர் | 712644281v | சந்திவெளி. |
| 4. | கனகன் கந்தசாமி | மகிடிக்கூத்து கலைஞர் | 652373548v | சந்தவெளி. |
| 5. | பாலிப்போடி தவராசா | கூத்து, மகிடிக்கூத்து கலைஞர் | 571493055v | சந்திவெளி. |
| 6. | தங்கராசா யோகநாதன் | கூத்து, மகிடிக்கூத்து கலைஞர் | 672413630v | சந்திவெளி. |
| 7. | பாலிப்போடி மயில்வாகனம் | கூத்து, மகிடிக்கூத்து கலைஞர் | 543563714v | சந்திவெளி. |
| 8. | ஆறுமுகம் சின்னத்தம்பி | அண்ணாவியார், மகிடிக்கூத்து | - | சந்திவெளி. |
| 9. | பாலிப்போடி கமலநாதன் | அண்ணாவியார், மகிடிக்கூத்து கலைஞர், ஒப்பனை | 482912265v | சந்திவெளி. |
| 10 | கமலநாதன் செந்தில்நாதன் | மகிடிக்கூத்து கலைஞர் | 850801886v | சந்திவெளி. |
| 11 | ஆ.தினேஸ்க்குமார் | மகிடிக்கூத்து கலைஞர் | மாணவன் | சந்திவெளி. |
| 12 | கமலநாதன் ரூபி | மகிடிக்கூத்து கலைஞர் | மாணவி | சந்திவெளி. |

| பாரம்பரியக் கலைஞர்கள் – மட்டக்களப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.இல | முகவரி |
| 1. | ராசா | அண்ணாவியார், கூத்துக்கலைஞர் | - | கல்லடி, மட்டக்களப்பு. |
| 2. | கிருஸ்ணபிள்ளை அருலம்பலம் | கூத்துப்பிரதி எழுதுபவர் ,பாட்டுக்காரர், கூத்துக்கலைஞர் | 630104890v | பருத்திச்சேனை, .கன்னங்குடா. |
| 3. | கணபதிப்பிள்ளை புவிக்குமார் | கூத்துப்பிரதி எழுதுபவர் ,பாட்டுக்காரர், கூத்துக்கலைஞா | 861870103v | பருத்திச்சேனை, கன்னங்குடா. |
| 4. | வேல்முருகு தம்பிமுத்து | அண்ணாவியார், கூத்துக்கலைஞர் ,மத்தளம் தயாரிப்பவர் | - | சித்தாண்டி-3. |

| வேடுவர்சமூக இசை – மட்டக்களப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ இல | முகவரி |
| 1. | கு. சண்முகம் | சடங்குசெய்பவர், ஆய்வாளர். | 56247241v | பிரதானவீதி, வந்தாறுமூலை. |
| 2. | சின்னத்தம்பி நடராஜா | வேடுவச்சடங்குசெய்ப வர், தெய்வக்காரர், பாடகர். | - | களுவண்கேணி -2, களுவண்கேணி. |
| 3. | நடராஜா இராமச்சந்திர ன் | பறைவாசிப்பவர். | 76126368v | களுவண்கேணி -2, களுவண்கேணி. |
| 4. | கந்தையா ஆறுமுகம் | பறைவாசிப்பவர், பாடகர். | - | களுவண்கேணி -1, களுவண்கேணி. |
| 5. | வெள்ளக்குட்டி கிருஸ்ணபிள் ளை | தெய்வஆட்டக்காரர். | - | களுவண்கேணி -1, களுவண்கேணி. |

| தப்பு இசை(அருந்ததியர் சமூகம்) – மட்டக்களப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ இல | முகவரி |
| 1. | திரு. க.கிருஸ்ணன் | தப்புவாத்தியக் கலைஞர் | 75133369V | விபுலானந்தபுரம், நொச்சிமுனை. |
| 2. | திரு. க.நாராயணன் | தப்புவாத்தியக் கலைஞர் | - | விபுலானந்தபுரம், நொச்சிமுனை. |

| பறைமேளம் - மட்டக்களப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ. இல | முகவரி |
| 1. | ஐ.அமரசிங்கம் | பறைமேளக்கலைஞர் | | மட்டக்களப்பு. |
| 2. | மூ.ராசதுரை | பறைமேளக்கலைஞர் | | மட்டக்களப்பு. |
| 3. | ச.கர்ணன் | பறைமேளக்கலைஞர் | | மட்டக்களப்பு. |
| 4. | ச.குமார் | பறைமேளக்கலைஞர் | | மட்டக்களப்பு. |

| காமன் கூத்து, சடங்கு – மலையகம். | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ. இல | முகவரி |
| 1. | S. பிரேம்குமார் | பாரம்பரியகலைஞர் | 803663 289 V | இல 6, பிரிட்வெல் பசார் பொகவந்தலாவ. |
| 2. | P.விஜயகாந்தன் | ஒழுங்கமைப்பாளர். | 851021 027 V | கெர்க்கஸ்வோல்ட் மத்தியபிரிவு பொகவந்தலாவ. |
| 3. | N.சாம்பசிவமூர்த்தி | பாரம்பரியகலைஞர் | 630641 950 V | இல.5 ஹில்வூட் ஸ்கீம் றொசல்ல. |
| 4. | P.விஜயகோபல் | பாரம்பரியகலைஞர் | 752133 123 V | மமா.அ.கவரவில த.ம.வி சாமிமலை. |
| 5. | V. கதிர்காமநாதன் | வாய்மொழிப்பாடல் கள். | - | டியன்சின் எஸ்டேட் பொகவந்தலாவ. |
| 6. | S. தியாகராஜ் | வாய்மொழிப்பாடல் கள். | - | |
| 7. | R. சேகர் | நாட்டாரியல். | 793561 377 V | தியனிலகெல லிந்துல. |
| 8. | K. ஜெயநந்தினி | ஒப்பனையாளர். | - | இல 6. பிரிட்வெல் பசார் பொகவந்தலாவ. |
| 9. | V. சித்திரசேகர் | கிராமியகலைகள். | 831243 538 V | சின்ன சூரியகந்தை சாமிமலை |
| 10. | V. இராமர் | தப்பிசைகலைஞர். | 680663 076 V | மமா..அ.கவரவில த.ம.வி சாமிமலை. |
| 11. | K. உதயசேகர் | பாரம்பரியக்கலை. | 753502 122 V | ஓல்டன் எஸ்டேட் மேற்பிரிவு சாமிமலை. |
| 12. | K. ஜோர்ஜ் | கிராமியக்கலைகள் | - | ஸ்டொக்ஹோம் தோட்டம் சுாமிமலை. |

| காமன் கூத்து, சடங்கு – மலையகம். | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ.இல | முகவரி |
| 13. | K. ஜோர்ஜ் | கிராமியக் கலைகள். | - | ஸ்டொக்ஹோம் தோட்டம் சாமிமலை. |
| 14. | S. தனசேகர் | கிராமியக் கலைகள். | - | கவரவில(B) சாமிமலை. |
| 15. | A. பழனியாண்டி | கூத்துக்கலைஞர். | 740742290 V | ஒல்டன் சாமிமலை |
| 16. | S.ஜெகன்தாசன் | ஒழுங்கமைப்பாளர். | - | பொகவந்தலாவதோட்டம் மேற்பிரிவு |
| 17. | S. சதிஸ்குமார் | நாட்டார் பாடல்கள். | 832361836 V | கெர்கஸ்வோல்ட் மத்தியபிரிவு பொகவந்தலாவ. |
| 18. | S. வளர்மதி | ஒப்பனையாளர். | 856541037 V | பிரிட்வெல் எஸ்டேட் பொகவந்தலாவ. |
| 19. | S. கிட்ணன் | தப்பிசைக் கலைஞர். | 501811793 V | கெர்கஸ்வோல்ட் மத்தியபிரிவு பொகவந்தலாவ. |
| 20. | S. நவனீதன் | கோடாங்கி. | 871353522 V | கெர்கஸ்வோல்ட் மத்தியபிரிவு பொகவந்தலாவ. |
| 21. | A. கலையரசு | நாட்டாரியல். | 722182545 V | அம்பிட்டிகந்த பூனாகல. |
| 22. | S.அமிர்தலிங்கம் | நாட்டாரியல். | 691964124 V | 3$^{rd}$டிவிசன் பூனாகல SPO பண்டாரவெல. |
| 23. | V.சண்முகநாதன் | நாட்டாரியல். | 811224685 V | கோட்லொஜ் எஸ்டேட் கந்தபொல. |
| 24. | P. கோபால் | கூத்துக்கலைஞர். | 472552104 v | பெரியமஸ்கெலியாடிவிசன் மொக்கா மஸ்கெலியா. |
| 25. | S. முருகேசு | கூத்துக்கலைஞர். | - | பெரியமஸ்கெலியாடிவிசன் மொக்கா, மஸ்கெலியா. |
| 26. | K. ராசையா | தப்பு, உறுமி | - | தியனிலகல லிந்துல. |
| 27. | M. மூவேந்தன் | ஒழுங்கமைப்பாளர். | 712930837 V | 19/3 பிரதானவீதி. சாமிமலை. |
| 28. | V. ஸ்ரீகனேசன் | நாட்டாரியல். | 761782991 V | மமா.அ.கவரவில த.ம.வி சாமிமலை. |

| பப்பிரவாகன் வடமோடிக்கூத்து, காத்தவராயன் – யாழ்ப்பாணம். | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தேசிய அடையாள அட்டை இல | முகவரி |
| 1. | வீரகத்திப்பிள்ளை | அண்ணாவியார் | - | அரலி, யாழ்ப்பாணம். |
| 2. | அண்ணமலை | மத்தளம் வாசிப்பவர். | - | அரலி, யாழ்ப்பாணம். |
| 3. | ஜயாத்துரை | ஒப்பனைக்கலைஞர் | - | அளவெட்டி மேற்கு, யாழ்ப்பாணம். |
| 4. | கந்தன் சின்னப்போடி | கூத்துக்கலைஞர். | 523643665 V | சுளிபுரம், யாழ்ப்பாணம். |
| 5. | முருகனசீலன் | கூத்துக்கலைஞர். | 592883970 V | யாழ்ப்பாணம். |
| 6. | சிவதாச | கூத்துக்கலைஞர். | - | யாழ்ப்பாணம். |
| 7. | ந. பிரபாகரன். | கூத்துக்கலைஞர். | 653453965 V | யாழ்ப்பாணம். |
| 8. | வைரவர் சுவாமிநாதன். | கூத்துக்கலைஞர். | - | யாழ்ப்பாணம். |
| 9. | க. தங்கவேலு | கூத்துக்கலைஞர். | 690284599 V | யாழ்ப்பாணம். |
| 10. | மா. குருநாதன் | கூத்துக்கலைஞர். | - | யாழ்ப்பாணம். |
| 11. | ற. ராஜ்குமார். | கூத்துக்கலைஞர். | - | யாழ்ப்பாணம். |
| 12. | பி. பாலச்சந்திரன். | கூத்துக்கலைஞர். | - | யாழ்ப்பாணம். |

| பறைமேளம், கரலாகட்டை – யாழ்ப்பாணம். | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ இல | முகவரி |
| 1. | காத்தமுத்து அமிர்தலிங்கம். | பறைமேளம் வாசிப்பவர் | - | யாழ்ப்பாணம். |
| 2. | அரியக்குட்டி | பறைமேளம் வாசிப்பவர் | 473152711 V | யாழ்ப்பாணம். |
| 3. | பா. சித்திரவடி வேலாயுதம். | கரலாகட்டை சுற்றுதல். | 542012803 V | யாழ்ப்பாணம். |

| வாசாப்பு, வடபாங்கு, தென்பாங்கு – மன்னார் | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ.இல | முக வரி |
| 1. | திரு.எஸ். கியூபட் பறுனாந்து | கூத்துஅண்ணாவியார் | | |
| 2. | திரு.எஸ். ஆனந்தநாயகம் லியோன் | கூத்துக்கலைஞர் | | |
| 3. | திரு. எம். அமலன் பறுனாந்து | பாட்டுக்காரர் | | |
| 4. | திரு.எஸ்.ரொனிபச்சேக் | வாத்தியக்கலைஞர் | | |
| 5. | திரு.ஜே. நிமால் பறுனாந்து | வாத்தியக்கலைஞர் | | |
| 6. | திரு.ஜே.பிறின்சிலி றெவ்வல் | வாத்தியக்கலைஞர் | | |
| 7. | திரு.எஸ். நோபட் பறுனாந்து | வாத்தியக்கலைஞர் | | |
| 8. | திரு.என். மதியழகன் | வில்லுப்பாட்டுக்கலைஞர் | | |
| 9. | திரு.எஸ். யூட்சன் பல்டானோ | கூத்துக்கலைஞர் | | |
| 10. | த. பறுனாந்துபிரீஸ் | கூத்துஅண்ணாவியார் | | |
| 11. | எஸ். முாசிலாமணி | கூத்துப்பாட்டு. அண்ணாவியார் | | |
| 12. | பிலிப்யூட் பசில்ராஜ் | ஒப்பனைக்கலைஞர் | | |
| 13. | எஸ். மாக்மில்லன் குருஸ் | ஒப்பனைக் கலைஞர் | | |
| 14. | றி. வர்சினிபறுனாந்து | நடனக்கலைஞர் | | |
| 15. | ஆர். ஸ்டெபிபிரீஸ் | நடனக்கலைஞர் | | |
| 16. | எஸ். சிந்துஜா பல்டானோ | கிராமியநடனக்கலைஞர் | | |
| 17. | என். அனுஜா பறுனாந்து: | கிராமியநடனக்கலைஞர் | | |
| 18. | என் தனுஜா பறுனாந்து | கிராமியநடனக்கலைஞர் | | |
| 19. | றி. அஜந்தன் | வாத்தியக்கலைஞர் | | |
| 20. | எஸ் உஷா | கிராமியநடனம | | |

| சிலம்பு - திருகோணமலை | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ இல | முகவரி |
| 1. | S.சுகுணசேகரம் | சிலாம்பாட்டக்கலைஞர் | 462542850v | திருகோணமலை |
| 2. | S.ராஜநாதன் | சிலாம்பாட்டக்கலைஞர் | 780812796v | திருகோணமலை |
| 3. | s.ராஜஆனந் | சிலாம்பாட்டக்கலைஞர் | 822890750v | திருகோணமலை |
| 4. | M.வேயானந்தம் | சிலாம்பாட்டக்கலைஞர் | 661483589v | திருகோணமலை |
| 5. | N.கமலேஸ்வரி | சிலாம்பாட்டக்கலைஞர் | 928227623 | திருகோணமலை |
| 6. | S.அம்பிகன் | சிலாம்பாட்டக்கலைஞர் | HM006331 | திருகோணமலை |
| 7. | S.திவாகர் | சிலாம்பாட்டக்கலைஞர் | 930933297v | திருகோணமலை |
| 8. | இ.இரத்தினசிங்கம் | | 560581653v | திருகோணமலை |
| 9. | க.வீரசிங்கம் | | 392822342v | திருகோணமலை |

| ஒப்பாரி – வன்னிப்பிரதேசம் | | | |
|---|---|---|---|
| முழுப்பெயா | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ இல | முகவரி |
| காளிமுத்து வள்ளியம்மா | பாடல் | 0024010100048 2(மு.அ.அ) | வன்னி. |
| அருச்சுன்ன நாகம்மா | பாடல் | 0249041800048 7((மு.அ.அ) | வன்னி. |

## பறைமேளம் – வன்னிப்பிரதேசம்

| இல | முழுப்பெயா | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ. இல | முகவரி |
|---|---|---|---|---|
| 1. | காத்தமுத்து அன்னலிங்கம் | பறைமேளக் கலைஞர் | 622862301 V | வன்னி. |
| 2. | வடிவேலு ஜெயக்கொடி | பறைமேளக் கலைஞர் | 622472805 V | வன்னி. |
| 3. | செல்லக்கண்டு பாஸ்கரன் | பறைமேளக் கலைஞர் | 74353500 V | வன்னி. |
| 4. | பொன்னம்பலம் குணபாலசிங்கம் | பறைமேளக் கலைஞர் | 821837452 V | வன்னி. |
| 5. | பொன்னம்பலம் கலைச்செல்வன் | பறைமேளக் கலைஞர் | 930775126 V | வன்னி. |

| கோவலன் கூத்து – வன்னிப்பிரதேசம் | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ. இல | முகவரி |
| 1. | பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை | கூத்துக்கலைஞர் | 472083201 V | வன்னி. |
| 2. | தம்பையா கணேசமணி | கூத்துக்கலைஞர் | 2209791-(spl 1c) | வன்னி. |
| 3. | முத்தையா தமிழ்வேந்தன் | கூத்துக்கலைஞர் | 1959471-(spl 1c) | வன்னி. |
| 4. | கெங்காதரன் சுகிர்தன் | கூத்துக்கலைஞர் | 880755331 V | வன்னி. |
| 5. | அமிர்தலிங்கம் பிரகலாதன் | கூத்துக்கலைஞர் | 900814941 V | வன்னி. |
| 6. | தனபாலசிங்கம் ஜெனகன் | கூத்துக்கலைஞர் | 930654078 V | வன்னி. |
| 7. | சிவராசா பிந்துஜன் | கூத்துக்கலைஞர் | 941963390 V | வன்னி. |
| 8. | மார்கண்டு ஜெயச்செல்வன் | கூத்துக்கலைஞர் | 820656008 V | வன்னி. |
| 9. | முத்தையா இராஜேஸ்வரி | கூத்துக்கலைஞர் | 477202632 V | வன்னி. |
| 10. | சிவராசா தர்மகேசன் | கூத்துக்கலைஞர் | | வன்னி. |
| 11. | தமிழரசன் தனுசிகன் | கூத்துக்கலைஞர் | | வன்னி. |
| 12. | கணபதிப்பிள்ளை அருந்தாகரன் | கூத்துக்கலைஞர் | 690534770 V | வன்னி. |
| 13. | கார்த்திகேசு குலசிங்கம் | கூத்துக்கலைஞர் | | வன்னி. |
| 14. | ஆறுமுகம் முருகுப்பிள்ளை | | 490934723 V | |

| களிகம்பு – அக்கரைப்பற்று | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தே.அ.அ. இல | முகவரி |
| 1. | M.A. சவீா | களிகம்பு | 803845671 V | இறக்காமம், அக்கரைப்பற்று. |
| 2. | K.L அலியாா் | களிகம்பு | 763360962 V | இறக்காமம், அக்கரைப்பற்று. |
| 3. | P.P வாசின் பாவா | களிகம்பு | 412981588 V | அக்கரைப்பற்று. |
| 4. | K.L சுகப்தீன் | களிகம்பு | 641831418 V | அக்கரைப்பற்று. |
| 5. | K.L ஆதம் லிபீ | களிகம்பு | 602482635 V | அக்கரைப்பற்று. |
| 6. | S.L. யமுல்டீன் | களிகம்பு | 470024097 V | அக்கரைப்பற்று. |
| 7. | K.L அப்துல் அகமட் | களிகம்பு | 630243533 V | அக்கரைப்பற்று. |
| 8. | M.L. ஆதம் பாவா | களிகம்பு | 663504887 V | அக்கரைப்பற்று. |
| 9. | A.L. சுலைமா லிபி | களிகம்பு | 652024037 V | அக்கரைப்பற்று. |
| 10. | M. ஸ்மா லிபி | களிகம்பு | 663625325 V | அக்கரைப்பற்று. |
| 11. | H.L முகைதீன் பாவா | களிகம்பு | 583627832 V | அக்கரைப்பற்று. |
| 12. | M.I பௌஸ் | களிகம்பு | 762825413 V | அக்கரைப்பற்று. |
| 13. | S.L.M அனீஸ் | களிகம்பு | 771892914 V | அக்கரைப்பற்று. |
| 14. | N.M சதாத் | களிகம்பு | 770013046 V | அக்கரைப்பற்று. |
| 15. | I. ஜஸ்தீன் பாவா | களிகம்பு | 473634490 V | அக்கரைப்பற்று. |

| பறங்கியர் இசை, நடனம் (கபறிஞ்சா) - மட்டக்களப்பு | | | | |
|---|---|---|---|---|
| இல | முழுப்பெயர் | கலைத்துறையில் விசேட திறமை | தேசிய அடையாள அட்டை இல | முகவரி |
| 1. | ஸ்ரீபன் அண்டறோ | வயலின் | 512462138 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 2. | நியூட்டன் செலார் | வயலின் | 470724315 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 3. | F.A பீற்றர்ஸ் | வயலின் | 912472345 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 4. | எட்வேட் அவுட்ஸ்ரோன் | றம்ஸ் | 473082543 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 5. | டைசோ டிலிமா | கிற்றார் | 933420655 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 6. | டீக்லி பீற்றர்ஸ் | சல்லாரி | 961852617 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 7. | டெனிக்பாத்லட் | நடனம் | 950152206 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 8. | லெஸ்லி அவுட்ரோன் | நடனம் | 951812463 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 9. | கெவின் கென்றிக் | நடனம் | 931493213 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 10. | கிளிண்டன் றேகல் | நடனம் | 96177340 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 11. | பொமி அவுட்ரோன் | நடனம் | 975392570 v | டச் பார், மட்டக்களப்பு. |
| 12. | டீலினா பீற்றர்ஸ் | நடனம் | | டச் பார், மட்டக்களப்பு. |
| 13. | சோபியா பாத்லட் | நடனம் | | டச் பார், மட்டக்களப்பு. |
| 14. | லினாஸ்ரான் றாகில் | நடனம் | 951404012 v | டச் பார், மட்டக்களப்பு. |

## "மடை" பாரம்பரிய கலைவிழா

## கொண்டாட்டத்திற்கும் உரையாடலுக்குமான வெளி.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒக்டோபர் 25 தொடக்கம் 27 வரையிலான மூன்று நாட்கள் "மடை" என்னும் பாரம்பரிய கலை விழாவானது பாரம்பரிய கலைகளின் திருவிழாவும் பாரம்பரிய கலைஞர்களின் கொண்டாட்டமும்: கலந்துரையாடலும்: காடசிப்படுத்தலும்: என்னும் தொனிப்பொருளில் திருகோணமலை சிவானந்த தபோவனத்தில் நிகழவுள்ளது.

சடங்கு.கூத்து ஆற்றுகைகளின் போது மடை வைத்தல் என்பது நம்பிக்கையுடன் இணைந்ததாகவும் மக்களின் அறிவியல் ஆற்றலை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. சூழலில் கிடைக்கக்கூடிய பொருட்களை பயன்படுத்தி மக்களின் உணவு.உடை.அலங்காரப் பாரம்பரியம் என அனைத்தினையும் வெளிப்படுத்துவதாக மடை வைக்கப படுகின்றது. மனிதர்கள் ஒன்றாக இணையவும் தங்கள் ஆற்றுகைகளை நிகழ்த்தவும் தங்களுக்காக தாங்கள் செய்வது. இத்தகைய மடை. வைக்கும் முறை உள்ளூர் பண்பாட்டில் முக்கியானது. மடை வைத்து மகிழும் பண்பாட்டின் தொடர்ச்சியாய் "மடை" என்னும் நம் மரபுச் சொல்லைத் தாங்கியதாக பாரம்பரிய கலைவிழா நடை பெறவுள்ளது. நிகழ்விற்கான கருத்தியல் தெளிவும் ஒழுங்கும் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்பாடுகள் அவருடன் இணைந்து செயற்படும் ஒழுங்கமைப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விழாவில் இருநூறுக்கு மேற்பட்ட கலைஞர்கள் இலங்கையின் மலையகம், மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மூதூர், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, உடப்பு போன்ற பிரதேசங்களிலிருந்து வந்து கலந்துகொள் கின்றனர். மலையகத்திலிருந்து காமன்கூத்து, மட்டக்களப்பிலிருந்து மகிடிக் கூத்து, தப்பிசை, பறைமேளக்கூத்து, கபறிஞ்ஞா நடனமும் அத்தோடு கூத்து அண்ணாவிமார்களும், பத்ததிச் சடங்கு வேடுவர் சடங்கு போன்ற சடங்கு சார்ந்த கலைஞர்களும், மன்னாரிலிருந்து வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு முதலிய ஆற்றுகைகளும், முல்லைத்தீவிலிருந்து கோவலன் கூத்தும் யாழ்ப்பாணத்திலிருந்து காத்தான் கூத்து, பப்பிரவாகன் கூத்தும் திருகோணமலையிலிருந்து கரகாட்டமும் அக்கரைப்பற்றிலிருந்து களிகம்பு, சிலம்பு, வாள்வீச்சு ஆற்றுகைகளும் உடப்பிலிருந்து பாரம்பரியக்

கலைகளும் அதனோடு தொடர்புடைய கலைஞர்களும். வருகை தந்து இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூன்று நாட்களிலும் ஆற்றுகைகள் உப்புவெளியில் உள்ள சிவானந்த தபோவனத்திலும் அதேவேளை பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் ஆற்றுகைகள் சில உட்துறைமுக வீதியிலுள்ள இந்து கலாசார மண்டப வளாகத்திலும், நகரக் கடற்கரையிலும் இடம்பெறவுள்ளன. மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணிவரை பாரம்பரிய ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளன. சமூக அறிவின் வெளிப்பாடாய் பரம்பரையாக கையளிக்கப்படும் அறிவியல் அலங்காரங்களான தோரணங்கள். மடாலயம் பந்தல் போன்ற அழகியல் உணர்வின் வெளிப்பாடாக காட்சிப்படுத்தல் களும் இடம்பெறவுள்ளது.

"மடை" என்னும் பாரம்பரிய கலை விழாவானது பல பிரதேசங்களிலிருந்து வருகை தரும் கலைஞர்கள் ஒரே இடத்தில் சந்திக்கவும் அவர்கள் தங்களது திறன் ஆளுமையை வெளிப்படுத்தவும் சேர்ந்து ஆற்றுகைகள் செய்வதிற்கும் கொண்டாட்டத்திற்குமான வெளியாக அமைகிறது. வேடர்சமூகம் .அருந்ததியர்,இஸ்லாமியர் சமூகத்தினர் குறவர் சமூகத்தினர் பறங்கியர் சமூகத்தினர் என பன்மைத்தன்மையான நம் பண்பாட்டினை உணரவும் ஒருவரைஒருவர் கௌரவிக்கவும் தங்கள் அனுபவங்களை பரிமாறவும் சேர்ந்து மகிழும் வெளியாகவுமுள்ளது.

இன்றைய இயந்திர தொழில்நுட்பச் சாதனங்களின் பெருக்கம், பொழுபோக்கிற்கான ஊடக வெளிகளின் பரம்பல் போன்றவை மனிதர்களை தான் வாழும் சூழலிலிருந்து தன் பண்பாட்டில் இருந்து பிற மனிதர்களிடமிருந்து பிரித்து தனியராய் மாற்றியுள்ள வாழ்வியல்ச் சூழலைக் காணலாம். ஐரோப்பிய கல்வி, ஐரோப்பிய பண்பாட்டு முறை உலகிக்கான பொதுவான நியதியாக மற்றைய நாடுகளுக்கு பரப்பப்படுகின்றன. இலாபத்தினை மையப்படுத்திய பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தினையும் இலாபத்திற்கானதாய் விற்பனைக் கானதாக வடிவமைக்கிறது. இத்தகைய சமூகப் பொருளாதாரச் சூழல் பாரம்பரிய பண்பாட்டின் பன்மைத்தன்மைகளை சிக்கல்கள் பொருந்திய தாகவும் சமூக முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் கட்டமைக் கின்றன. அதேவேளை மூடநம்பிக்கைகளாகவும் படிக்காத பாமர மக்களின் செயற்பாடுகளாகவும் நாகரீகமற்றவைகளாகவும் இக்காலத்திற்கு பொருத்த மற்றவைகளாகவும் கல்வி.இலத்திரனியல் போன்ற ஊடகங்கள் வாயிலாக பரவலாக்குகின்றன.


மக்களின் வாழ்வியல் அனுபவங்கள் மூலம் உருவாக்கப்பட்ட உள்ளூர் அறிவியல் முறைகள் நம்பிக்கைகள், சடங்குகள், ஆற்றுகைகள் சமூக இருப்பிற்கானவைகளாக தொடர்ந்தும் சமூகத்தினை இணைப்பவைகளாக சேர்ந்து இயங்கக் கூடிய வெளிகளாக செயற்பட்டு வருகின்றன. இவற்றினை சுயமான வாழ்தலை முன்னெடுப்பதற்கான செயல்வாதமாக அல்லது இன்றைய உலகமயமாக்கல் அதிகாரப் பண்பாட்டுக் கூறுகளுக்கான மாற்றீடாக முன்னெடுத்து வரும் சமூகப்பண்பாட்டுச் சுழலையும் காணலாம். ஆனால் உலமயமாக்கல் போன்ற அதிகாரச் செயற்பாடுகளுக்கு மாறாக நம் பாரம்பரிய நம்பிக்கைகளை வாழ்தல் முறைகளை சடங்குகளை அப்படியே முன்னெடுப்பதிலும் சிக்கல்கள் உள்ளன.

நம்பிக்கைகள், சடங்குகள், ஆற்றுகைகள் போன்ற பண்பாட்டுக் கூறுகளில் பெண்கள் மீதான பாரபட்சங்களையும் சாதிய ஏற்றத்தாழ்வுகளையும் காணலாம். அதாவது பண்பாட்டு வெளியில் பெண்கள் புனிதமற்றவராக, பலவீனமானவர்களாக ஒதுக்கப்படுவதனையும் சாதியரீதியாக சமூகங்களும் அவர்கள் கலை மரபுகளும் தீண்டத் தகாதவைகளாக புறந்தள்ளப் படுவதனையும் பண்பாட்டு வெளியில் அவதானிக்க முடிகின்றது. இத்தகைய பிரச்சனைகள் சார்ந்த உரையாடல்கள் எமது சமூகத்தளங்களில் அவசியமானவை. உரையாடலும் செயற்பாடுமே நம் பண்பாட்டு நடவடிக்கைகளை ஆக்கபூர்வமானவைகளாக முழுச் சமூகத்திற்கு மானதாக முன்னெடுக்க உதவும்.

இத்தகைய கருத்தியல் தளத்தில் நின்றே திருகோணமலையில் இடம்பெறவுள்ள "மடை" என்னும் பாரம்பரிய கலை விழாவானது இலங்கையிலுள்ள பல பிரதேசக் கலைஞர்களை இணைப்பதுடன் அவர்களுக்கிடையிலான உரையாடலை நிகழ்த்தும் களத்தினையும் உருவாக்கியுள்ளது. அதாவது கலை மரபுகளிலுள்ள கருத்தியல் அழகியல் சிக்கல்களை இணங்காண்பதும் இவை சார்ந்த உரையாடல்களை கலைஞர் கள் மத்தியில் நிகழ்வதனை தொடக்கிவைப்பதாகும். இவ்வகையில் மடை என்னும் பாரம்பரிய கலை விழா கலைஞர்களை கலைகளை கௌரவிப்பதுடன் கருத்தியல் உரையாடலுக்குமான களமாகவும் நடைபெறவுள்ளது.

கி.கலைமகள்

# ஆற்றுகைகள், காட்சிப்படுத்தல்கள், கலந்துரையாடல் சூழலின் வரைபட அமைப்பு



# *தப்பு இசைக்கலை.*

மட்டக்களப்பின் பாரம்பரிய கலைச்சூழலில் சிறுசமூகங்களுக்கிடையே பல்வேறுவகையான கலைச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு அருந்ததியர் சமூகத்தினரிடம் காணப்படுகின்ற **"தப்பு ஆட்டம்"** எனும் கலைவடிவம் முக்கியம் பெறுகின்றது. மட்டக்களப்பில் உள்ள கலைவடிவங்களில் இக்கலைவடிவம் அறியப்படாதிருந்த நிலையில் குறித்த கலைவடிவத்தினை ஆற்றுகை செய்வதற்கும், முன்கொண்டு செல்வதற்குமான சூழலினை உருவாக்குவதில் பாரம்பரிய ஆற்றுகையுடன் தொடர்புடைய கலைச்செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

காலனித்துவ ஆட்சியின்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நகர சுத்திகரிப்பிற்கு கூலித்தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்ட சமூகமே அருந்ததியர் சமூகம் ஆகும். இவர்கள் மட்டக்களப்பின் பல பிரதேசங்களில் வாழ்ந்து வந்தாலும் நாவற்குடா பிரதேசத்தில் உள்ள குறித்த சமூகத்தினரிடம் தப்பு ஆட்டம் எனும் கலைவடிவம் முக்கியம் பெறுகின்றது. இதுவரை காலமும் மட்டக்களப்பின் பாரம்பரிய ஆற்றுகைச் சூழலில் அறியப்படாததும், இணைந்து செயற்படாததுமான இக்கலைவடிவத்தினையும், கலைச்செயற்பாட்டாளர்களினையும் இணைத்து பயணிப்பது சிறுசமூகத்தினர் மத்தியில் காணப்படும் கலைவடிவங் களுக்கும், சமூகத்திற்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தினை உணர்த்துவதுடன் பண்பாட்டின் இணைப்பில் உள்வாங்கிக்கொள்வது அர்த்தபுஸ்டியான கலைச்செயற்பாட்டின் அடித்தளமாக அமைகின்றன

மட்டக்களப்பு நாவற்குடாவில் அருந்ததியர் சமூகக் கலைஞர்களாக வாழும் க.கிருஸ்ணன், க.நாராயணன் போன்றோர் தப்பு ஆட்ட கலைஞர்களாக அறியப்படுகின்றனர். தந்தைவழிரீதியாக தங்களது 12வயது முதல் தப்பு கலையினை பழகத்தொடங்கிய இவர்கள் குறிப்பிட்டகாலம் வரையே தப்பு ஆட்டக்கலையினை முன்கொண்டு சென்றுள்ளனர். குறிப்பிட்ட சமூகத்தினர் மத்தியில் நிகழும் மரணவீடு, திருமண நிகழ்வுகளிற்கும் இதனை பயன்படுத்தி வந்துள்ளதுடன் மாரியம்மன் சடங்கிற்கும் தப்பு வாசித்துள்ளார்கள் என குறிப்பிடப்படுகின்றது. இது தவிர சித்திரை வருடப்பிறப்பினை மையமாகக்கொண்டு ஊர்ஊராகச் சென்று தப்பு வாசிக்கின்றனர்.

நடேசன். நந்தகுமார்.

# மகிடிக்கூத்து

மகிடிக்கூத்து ஒரு சமூகத்தின் வரலாற்றினை மக்களின் அறிவியல் மரபினை வெளிப்படுத்தும் நிழ்த்துகையாகும். நிகழ்த்தப்படும் வெளியானது மிகப்பெரிய அளவிலான பகுதியில் நடுவில் கமுகு மரம் நடப்பட்டிருக்கும். ஐந்துகும்பங்கள் கும்பங்களுடன் இணைந்ததாக முனியும் சீடரும் அமர்ந்திருப்பார்கள். முக்கிய கும்பமாக ராஜகும்பம் வைக்கப்பட்டிருக்கும். ராஜகும்பத்தை குறவர்கள் தங்கள் மந்திர சக்தியால் எடுத்தால் குறவர்கள் வென்றதாகவும் எடுக்காத பட்சத்தல் ஊரை விட்டு துரத்துவதாகவும் முனிவர்களால் அறிவிக்கப்படும். ராஜகும்பம் என்பது வண்டில் சில்லின் மீது வைத்து கட்டப்பட்டு அதனை அசைப்பதற்குரிய இரு கயிறுகள் நிலத்தின்கீழ் வைக்கபப்பட்டு அக்கயிற்றினை இழுக்க கும்பம் சுற்றக் கூடிய பொறிமுறையில் அமைக்கப்பட்டிருக்கும்.

முனிவர் ஓடி ஒளிப்பதற்குரிய பொறிமுறையுடன் அவர்களுக்கப் பின்பகுயில் நிலத்தினைத் தோண்டி 03 குழிகள் அமைக்கபடும்.அதனைச் சுற்றி சேலையால் அடைக்கப்பட்டிருக்கும். குழிக்குள் சென்று ஒழிப்பதற்கு நிலத்திற்கு கீழ் செல்லும் வழியும் அமைத்து அதன் மீது தகரம் வைத்து மணல் போல் சமதரை போன்ற பொறி முறையில் அமைக்கப்பட்டிருக்கும். ஊருக்குள் வரும் குறவர்களை முனியும் சீடரும் தங்கள் மந்திர வித்தையினைக் காட்டி துரத்துவதும் அதற்கு குறவர்கள் தங்கள் மந்திர வித்தையினைக் காட்டி போட்டிக்கு அழைப்பதும் செய்து காட்டப்படும். இப்போட்டியில் இருவரையும் சமாதானப்படுத்துபவராக கோட் சூட் அணிந்த உடையார் காணப்படுவார். இவர் பார்வையாரளர்களிடம் சென்று பிரச்சினையை தூண்டுபவராகவும் காணப்படுவார். உடையார் நகைச் சுவையுடனான பாத்திரப்படைப்பாக அரசியல் தன்மை கொண்டவராகவும் அமைக்கப்பட்டிப்பார்.

கி.கலைமகள்

## முஸ்லிம்களுடைய பாரம்பரிய நிகழ்த்துகைகள் (களிகம்பு, வாள்விச்சு, பக்கீர்பைத்)

இஸ்லாமியர்களுடைய பாரம்பரிய கலாச்சாரங்களில் பிரதானமானவை களாக பக்கீர்பைத் வாள்வீச்ச களிகம்பு என்பன விளங்குகின்றன. இவை மக்களின் தனித்துவங்களை வெளிப்படுத்துபவைகளாகும். இந் நிகழ்த்து கைகள் பெருநாள் தினங்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் ஏனைய விசேட தினங்களின் போது ஆற்றுகை செய்யப்படுகின்றன. பக்கீர்பைத் இஸ்லாமிய இசை மரபு இஸ்லாமிய வரலாற்றுக் கதைகளை, நபிமார் களின் ஸஹாபாக்கல்களின் வாழ்க்கை வரலாற்றுக் களை வெளிப்படுத்தும் ஆற்றகையாகும். இங்கு பிரதான இசைக்கருவியாக ரபான், தர்கா கட்டை பயன்படுத்தப்படுகின்றன. அளிக்கையில் இதனை தட்டி ஒலி எழுப்பி பாடுவார்கள்.

இஸ்லாமிய ஆடல் நிகழ்த்துகையின் முக்கியமானதொரு அம்சமாக களிகம்பு அல்லது பொல்லடி காணப்படுகின்றது. இது ஒரு ஆற்றுகை நிகழ்த்துகையாக வெளிப்படுத்தப்படும். இதனை வழிநடத்துபவராக பெருப்பாலராக பாடல்களைப் பாடுவர் ஒருவர் விளங்குவார். ஒருவர் வைத்திருக்கும் பொல்லுடன் மற்றையவர் வைத்திருக்கும் பொல்லைத்தட்டி ஒலி எழுப்பி அசைவுகளுக்கேற்ப துள்ளல்களாக நிகழ்த்துகை செய்யப்படும். இங்கு பாடல்களும் தாளக்கட்டுகளும் முக்கியமானவை களாகும். இவை இடத்திற்கு இடம் பாடல், ஆடல் வேறுபாடுகளை கொண்டவைகளாக காணப்படும். இஸ்லாமியர்களின் வீரதீரச் செயல்களை வெளிப்படுத்துபவைகளாக வாள்வீச்சு விளங்குகின்றது. இந்நிகழ்த்துகை யானது ஆடல், பாடல், துள்ளல் முறைகளின் வழியாக நிகழத்துகை செயய்ப்படுகின்றது.

எம்.ரி.எம்.றிஸ்வி

# தோரணமும் களரியும்

தோரணமும் களரியும் தமிழரின் பாரம்பரியஅரங்கக் கட்டுமாங்களில் மிகமுக்கியமானதாகும். இது மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் கண்கவர் அழகியல் வெளிப்பாட்டுடன் பக்தி கலந்ததாக சமூகத்தில் முன்னிலைப்படுத்தப்படும். தோரணம் கட்டுதலானது பல அர்த்தமுடையதாக தமிழர் மத்தியில் நிலவுகின்றது. அழகியலுக்கு அப்பால் கோவில் சடங்குகளில் தோரணச் சடங்கு ஒன்று உருவாக்கப்பட்டு அலங்காரத் தோரணம் குறிப்பிட்ட கோயிலின் பந்தலில் ஊர் மக்களால் நேர்த்தியுடன் கம்பு வெட்டி கட்டப்படும். தொடர்ந்து அப்பிரதேச மக்கள் அனைவரும் ஒன்று திரள பக்தியுடன் கொண்டு செல்லப்படும். இதில் தேர்ச்சி பெற்ற கட்டுமானக் கலைஞர்கள் இணைந்து பொருத்தமான அளவுத்திட்டத்துடன் கம்புகளை வெட்டி பிரதேச தனித்துவத்திற்கு ஏற்ப நாள் முழுவதும் அலங்கரிப்பர். மட்டக்களப்பு படுவான்கரையில் தோரணம் கட்டுவதற்கான சடங்கானது பெருவிழாவாக சமூகம் ஒன்றிணைய மிகவும் அர்த்தப் பாட்டுடன் நிகழும்.

கூத்துப் பழகி அரங்கேற்றும் வரையும் இந்தக் களரியில் ஊர்மக்களின் இணைவு சிறப்பாக அமையும். கூத்துப் பழகும் இடம் பொதுவாக எல்லோரும் கூடி இருக்கக் கூடிய வெளியாகும். கிராமத்தவர்கள் ஒன்றி ணைந்து தமது மகிழ்வு, அறிவை, உறவுப் பரிமாற்றத்தைப் பெறும் இடமாகவும் தாம் கற்றுக் கொண்டு பாரம்பரியத்தை இளம் தலைமுறை யினருக்கு கையளிக்கும் இடமாகவும் இது விளங்குகின்றது. கூத்துப் பழகும் காலத்தில் ஊர்மக்கள் கூத்தர் பற்றி விசாரித்தல், அபிப்பிராயம் கூறுதல் வெளிப்படுவதோடு, கூத்தர் பற்றிய தெளிவும் இடம்பெறும். பழகும் கூத்தரும் இந்த அபிப்பிராயங்களைச் செவிமடுத்து ஆடுவர்.
தமிழர் பண்பாட்டு அரங்கக் கட்டுமான வெளியாக இக்களரி முன்னிலைப் படுத்தப்படுகின்றது. சுற்றிக்கட்டப்படும் வட்டவடிவமான வெளியை எமது முன்னோர் களரி என்றே அழைத்தனர். தமிழர் மத்தியில் இதுவே வழக்கிலிருந்து வருகின்றது. இவை அமைக்கப்படுவதற்கான அளவுப் பிரமாணங்களும் உண்டு. இக்களரி அமைப்பதற்குரிய கையளிக்கை பாரம்பரிய அரங்க விற்பனர்களுடாக மிகவும் நேர்த்தியாக கிடைக்கும் அதே நேரம் உயிர்த்துவமான செயற்பாடாகவும் அமையும். கூத்துப் பழகி அரங்கேற்றம் வரையும் பொருத்தமான ஆற்றுகை வெளியைக் கொண்டு இக்களரிகட்டப்படும்.

திரு. சு.சந்திரகுமார்.

# பறங்கியர் சமூக பாரம்பரிய இசை நடன நிகழ்வு

மட்டக்களப்பில் பறங்கியர் சமூகத்தின் மத்தியில் மிகவும் பிரக்ஞை பூர்வமாக ஒல்லாந்தர் காலத்திற்குப் பின்னர் நிகழ்த்தப்பட்டுவருகின்றது. அம்மக்களின் அனைத்து மகிழ்வான நிகழ்வுகளிலும் இவ் இசை நடன நிகழ்வு மகிழ்வைத்தரக் கூடியவாறு இடம்பெறும். திருமணவைபவம். பிறந்தநாள் வைபம், தேவாலய நிகழ்வுகள், வெற்றிக் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளில் எல்லாம் கபறிஞ்சா அந்தமக்கள் ஒன்றிணைய நிகழ்த்தப்படும். இவை வயலின், சல்லரி, மெற்றலீன், எக்கோடியன். மௌத் ஓகன், றம், கிற்றார் போன்றவாத்தியக் கருவிகள் மூலம் பலவகையான இராக இசைகளை இசைக்க அதற்கேற்ப குறைந்தது நான்கு ஜோடி ஆட்டக் கலைஞர்கள் (ஆண், பெண்) மிகவும் நேர்தியாக ஆடி பார்ப்போரை மகிழ்வடையவைப்பர். இவை 45 நிமிடம் வரையும் காணப்பட்டாலும் தற்போது 20 நிமிடமாக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. திருமண வைபவங்களில் இரண்டு நாட்களுக்கு பொருத்தமான நேரத்தில் நிகழ்த்தப்படும். இவ்வாறான பாரம்பரிய இசை நடன நிகழ்வு மட்டக்களப்பின் பல் வகைமை ஆற்றுகைகளின் சிறப்பை முன்னிலைப் படுத்துகின்றது.

திரு.க.சந்திரகுமார்.

## *MADAI:* COMMUNITY EMPOWERMENT THROUGH THE ARTS

In continuing their tradition of truly grassroots community empowerment, a group of activists, artists and intellectuals will this weekend host *Madai*: a festival dedicated to bringing together traditional artists from across the country to discuss and perform their arts in Trincomalee from 25-27 October 2013.

The aims of this festival are simple:

1. To act as a space for traditional performers to not only share their skill and expertise but also engage with each other: something which generally does not happen, even within a district, never mind across the country;

2. To celebrate these traditional art forms and the artists who, despite very limited resources and support, find ways to sustain them;

3. To encourage the artists to reflect on and discuss their arts:

- How are these arts impacted by societal developments, such as globalisation?
- How do they (or can they) address issues of discrimination such as that based on caste and/or gender?
- How and why do these artists continue to practice their arts? What value do they see in these practices – to themselves and society?
- What are the challenges they face?

The aims may be simple but the philosophy of the festival organisers is radical.

While traditional performers have long been treated as 'objects of study', this programme is designed to make them active participants. Rather than the 'experts' being those who study, analyse, critique and write about these arts, this programme aims to shift the power back to those who are responsible for maintaining these practices: To treat them as people who also have knowledge.

In doing so, the organisers hope to gain a far richer understanding of why these artists do what they do and to discuss with them what they see to be the important sites for both continuation and change. After all, this is the value of - and conditions of survival for - any art: the meaning it gives to the lives of the people who perform, participate and observe it.

It is also only by discussing with those who operate *within* a culture or community that progressive change can be achieved. As we have increasingly learnt within the human rights world, the external imposition of norms will never achieve genuine social change, equality and justice if the community itself does not see the value in these principles. And at the same time, often the very sources for positive change already exist within the group: something that is overlooked when outside 'experts' see their role as simply one of 'educating' rather than engaging with the marginalised, discriminated or oppressed.

Thus, not only does this festival promise to offer a never-before-seen insight into a range of traditional art forms, it also presents a model for truly egalitarian political and social activism and research.

The performances will be captivating: it is a rare opportunity to see so many different – often quite marginal - art forms represented in the one place.

The discussions will no doubt be lengthy, complex and maybe even controversial. But they cannot fail to be interesting.

And best of all, this can provide the beginning of a long-term process of true empowerment. By bringing the community of artists together with intellectuals, activists and the general public, the organisers hope that it will provide a space for those who are so often rendered invisible by state and global forces to have their voices heard.

Dr.Kiran Grewal
School of Social and Political Sciences
University of Sydney

## *மடை - பாரம்பரியக் கலைகளின் திருவிழாவும் பாரம்பரிய கலைஞர்களின் கொண்டாட்டமும்*

மக்கள் தமது வாழ்வில் மகிழ்வுடனும் சுகத்துடனும் வாழ்வதற்கு தங்களுக்கென ஒரு திட்டமிடலைக் கொண்டு வருடாவருடம் சமூக இணைப்பிற்கான நிகழ்வுகளை தமது மண் சார்ந்ததாக வடிவமைத்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்த வேளையில் காலனிய ஆதிக்க வெளிப்பாட்டால் தமது கல்வி பண்பாடு வாழ்கை முறைகளில் மக்கள் மத்தியில் பரப்புவதற்கு பல பிரயர்த்தனங்களை மேற்கொண்டு மக்களைத் திணர வைக்கின்றமையும் நிலவுகின்றது. அதன் தொடர்ச்சியாக நவீன கல்விப்புலம் பல வழிகளில் கட்டமைத்து உருவாக்கிய எம்மவர்களில் சிலர் அதனை முன்னெடுக்கும் தூதுவர்களாக தம்மை முன்னிறுத்தியுள்ளமையும் நிலவுகின்றது. உலகமயமாக்கலின் தீவிர போக்கினால் உலகப் பொதுவான பண்பாட்டை உருவாக்கும் நிலையில் கங்கனம் கட்டிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மக்களைத் தனியன்களாக்கி பிரித்து உறவை வலுப்படுத்தும் சூழல் இல்லாத இந்த 21ம் நூற்றாண்டில் மக்கள் அதனைக் கடந்து தம்மை இணைப்பதற்காக வடிவமைத்து வைத்திருந்த பாரம்பரிய கலைகளை மேலும் வலுவாக சுய திட்டமிடலுடன் கிராமப்புறங்களில் முன்னெடுத்துக் கொண்டாடு கின்றமை மகிழ்வைத் தருகின்றது.

பொதுவாக பாரம்பரிய கலைவிழாக்கள், ஆய்வரங்குகள், மக்கள் சார்ந்த நிகழ்வுகள் மக்களிடம் தகவல்களை எடுத்துக் கொண்டு தனி ஒருவரினால் அடைக்கப்பட்ட மண்டபத்தினுள் படித்துவிட்டு அல்லது சமர்ப்பித்துவிட்டுச் செல்லும் போக்கிலிருந்து முற்றாக விடுவித்து செல்லும் புதிய போக்காக பாரம்பரியக்கலைகளின் திருவிழாவும் கலைஞர்களின் கொண்டாட்டமும் எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. “மடை” எனும் பெயரில் முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வில் பாரம்பரிய கொண்டாட்டங்களையும், ஆற்றுகைகளையும், காட்சிப்படுத்தல்களையும், கலந்துரையாடல்களையும் இது கொண்டுள்ளது. மடை எனும் சொற்பதம் சமூகத்தில் வழிவழியாக

பெரியோர் முதல் சிறியோர்வரை பரிட்சயமானது. மடை எனும் பெயரில் சுட்டி நிற்கும் இந்த விழா வேறுபட்ட எண்ணக்கருவுடன் கலாநிதி சி. ஜெயசங்கரின் தலைமையில் இந்து 'கலாசார அமைச்சின் அனுசரணையுடன் ஒழுங்கமைப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு தொடர் செயற்பாட்டுடன் பல வழிகளில் திட்டமிட்டு நடைபெறுகின்றது.

கலைகளை அடிப்படையாகக் கொண்ட செவ்வியல் கலை விழாக்கள் அல்லது கிராமியக்கலைவிழாக்கள் முன்னெடுக்கப்படுவதுபோன்று இவை இல்லை. நவீன கல்வியின் அதிகார கட்டமைப்பில் அவை முன்னெடுக்கப்படும் விழாவாகவே அமைந்தது. மடையின் தொனிப் பொருள் மிகவும் வித்தியாசமானது. பன்முக சமூகத்தை உள்வாங்கி அதிகாரத்தாக்கம் இல்லாத மக்கள் மைய நிகழ்வாக திகழ்கின்றது. இது திருகோணமலையில் சிவானந்த தபோவன சிறுவர் இல்லத்தில் 25.10.2013 தொடக்கம் 27.10.2013 வரை ஈழத்துத் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அனைத்துப் பாரம்பரிய கலைச்செயற்பாட்டாளர்களையும் இணைத்த கொண்டாட்டப் பெரு விழாவாகும்.

மடை என்பது சமூகத்தில் பொதுவாக பண்பாட்டுத்தளத்தில் இரண்டறக் கலந்த "பல்பொருட்களையும் ஒன்றிணைத்ததாக" விளங்குகின்றது. மடை வைத்தலானது ஒருமடையில் தொடங்கி மூன்று, ஏழு என தொடர்ந்து செல்வதும் உண்டு. வீடு கட்டுவது முதல் புது மனை புகுதல் வரையும் மடை வைத்தே அதனை ஆரம்பிப்போம். சடங்கு சம்பிரதாயங்கள், வாழ்கைமுறைகள், இன்ப துன்ப நிகழ்வுகள் போன்றவற்றில் எல்லாம் மடைக்கெனதனி இடம் உண்டு. அவை வைப்பதற்கான தனியான முறைமையும் உண்டு. எனினும் இருபாலாரும் தமது விருப்பிற்கேற்ப இதனை வைப்பர். பொதுவாக மடைக்கென பாக்கு, பழம், வெற்றிலை,தேங்காய், ஊதுபத்தி, வேப்பிலை, கமுகம் பூ போன்ற பொருட்களை இணைத்து வைக்கப்படும். இந்த பல் பொருட்களையும் ஒன்று சேர்த்து வீரியத்தை ஏற்படுத்துவது பன்முகத்தன்மை வெளிப்பாட்டை புலப்படுத்துகின்றது. கசப்பு, புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு முதலான சுவையும்

இதில் உண்டு. இவ்வாறே அனைத்துக் கருத்து வெளிப்பாடுகளையும் இந்த மடை தாங்கி தமிழர் பண்பாட்டில் வலம் வருகின்றது. உலகமயமாக்கல் சூழலிலும் மடை மடையாகவே திகழ்கின்றது.

மடை எனும் கலை விழாக் கொண்டாட்டமும் இலங்கையில் பல பாகங்களிலும் பாரம்பரியத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் கலைஞர்களையும் அதனூடாக வெளிப்படும் கலைகளையும் ஒன்றிணைக்கும் பன்மைத்தன்மை சார்ந்தவையாகும். கிராமப்புற நிகழ்த்துகலைஞர்கள் தமது சமூகத்தினரை இணைத்துக் கொண்டு தாமாகவே தமக்குரிய மகிழ்விற்கான தமது திட்டமிடலுடனும் சுய செயற்பாட்டினுடனும் எந்தவிதமான பெரும் செலவும் இன்றி தமக்குள் சிறிய அளவு பணத்தைச் சேர்த்துக் கொண்டு பாரம்பரிய கலை நிகழ்துகைகளை பருவகாலங்களில் உட்சாகத்துடன் முன்னெடுக்கின்றனர். அப்போது கிராமத்தவர் மகிழ்வுடன் கலந்து கொள்வர். இவ்வாறு முன்னெடுக்கும்போது சில பிரச்சினைகள், சவால்கள் போன்றவற்றையும் எதிர்நோக்கவேண்டிய சந்தர்ப்பமும் நிலவும். இதனை மிகவும் திட்டமிட்டு தாமாகவே தீர்த்துக்கொள்ளும் திறன் கொண்டகலைஞர்களின் கொண்டாட்டமே இங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இலங்கையின் பல்வகை சார்ந்த சுமார் 200 கலைஞர்கள் சங்கமமாகும் நிகழ்வே இதுவாகும். தாம்தேர்ச்சிபெற்ற இந்த பாரம்பரிய கலைச் செயற்பாட்டில்தாமாகவே தமது அறிவு, திறன் போன்றவற்றோடு குறித்தகலையில் தமக்கிருக்கும் ஆழ்ந்த புலமைத்துவம் போன்ற வற்றையும் தாமாகவே எடுத்துக் கூறுவதாகவே அமைவது இந்த மடையாகும். மக்கள் தாங்களே தமது ஆற்றல்களைப்படைப்பது இந்த மடையில் நிகழும்.

தமது ஆற்றல்களைத் தாங்களே ஒன்றுசேர்ந்து பரிமாறுவதற்குரிய சந்தர்ப்பமானது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் கிடையாது. கிராமப் புறத்திலே குறிப்பிட்ட அண்ணாவியார் அல்லது கலைஞர் இருப்பாராயின்

அவர்கள் பற்றிய பெயரோ, திறனோ அவரது முகத்தையோ பார்க்கும் வாய்ப்பு சிலருக்குக் கிடைக்காது ஆனால் இந்த நிகழ்வில் சிறப்புற தமது திறனைக் கொண்டுள்ள எழில் மிகு 'பாரம்பரியக் கலைஞர்கள் அனைவரையும் ஒன்றுசேர பார்ப்பதோடு அவர்களது உணர்வை உணரச் செய்வதற்கான இடமாகவும் இவை அமைகின்றது.

இத்திருவிழாவில் மக்கள் கலைஞர்கள் அனைவரும் தனியாகவும் கூட்டாகவும்தமக்கு வாலாயமான கலை ஆற்றல்களை பல சந்தர்ப்பங்களில் மற்றய கலைஞர்களுக்கு வெளிப்படுத்துவர். அதனை மற்றய கலைஞர்களுக்கு பகிர்ந்து மகிழ்வதோடு இதில் பரீட்சயமாகி அது தொடர்பான உரையாடலில் ஈடுபடும் வாய்ப்புண்டு.

பல்வகைமைகளை முன்னிலைப்படுத்தும் இந்தமடையில், இலங்கைக் கலைஞர்களின் கலை வெள்ளம் பாய்வதையும் காணலாம். யாழ்ப்பாணத் தில் இருந்து 16 பேருடன் பப்பரவாகன் வடமோடிக்கூத்து, காத்தவராயன் கூத்து நிகழ்த்துகையும், அந்தக்கலைஞர்களின் உரையாடல்களும், முல்லைத்தீவில் இருந்து கோவலன்கூத்தும், சிலம்பு கூறல் நிகழ்வும் பகிர்வுகளும், மன்னாரில் வாசாப்பு, வடபாங்கு, தென்பாங்கு எனும் பாரம்பரிய ஆற்றுகைகளை இணைத்த மன்னார் மாலையும்,உணர்வுப்பகிர்வும் உடப்பின் அதன் தனித்துவ ஆற்றுகைகளும், திருகோணமலை துரோணர் போர் வடமோடிக் கூத்து, சிலம்பாட்டம், கும்பத்துச் சடங்கும், அந்தக் கலைஞர்களின் அடிமன வெளிக்கொணர்கையும், மட்டக்களப்பில் 56 பாரம்பரியக் கலைஞர்களை உள்ளடக்கிய வேடச் சமூகத்தினரின் வேடச் சடங்கு இசை நிகழ்வுகளும், பறங்கியர் சமூகத்தினரின் கபறிஞ்சா அதனுடன் தொடர்பான அவர்களின் பாரம்பரிய இசை நிகழ்வும், மட்டக்களப்பில் வருடாவருடம் சமூகத்தை இணைத்து நடைபெறும் கூத்துக்களில் ஒன்றான மகிடிக் கூத்தும், முஸ்லீம்களின் தனித்துவத் தினை வெளிப்படுத்தும் பக்கீர்பைத், பொல்லடி, வாள்வீச்சு போன்ற நிகழ்வும், அருந்ததியரின் தப்பு எனும் வாத்தியக் கருவிமூலம் மிகவும் காத்திரமாக இசைக்கப்படும்இசை நிகழ்வும், பாரம்பரிய இசைக்கருவி

களான பறை, மத்தளம், தாளம், சவணிக்கை, உடுக்கை, சொர்ணாளி போன்றவற்றினுடனான இசைக் கோர்வையும் என ஒன்று திரண்ட நிகழ்வாக இவை அமையும்.

கலைஞர்கள் அவர்களாகவே தமது ஆளுமைகளைச் செய்து காட்டியும், உரையாடல் மூலமும் தம்மை அடையாளப்படுத்தும் அற்புத நிகழ்வு இங்கு செவ்வனே இடம்பெறும். பாரம்பரிய கலைஞர்களிடம் தமக்கென தனித்துவமான திறன் உண்டு. அவர்கள் தமது பண்பாட்டுச் சூழலில்தாமாகவும், செய்து கற்றல் மூலமும் பெற்றுக் கொண்ட அனுபவக்கருத்துக்களை வெளிப்படுத்துவர்.குறிப்பாக கூத்துத்துக்கலைஞர் தமது ஆட்டப்பின்புலம், வரவுத்தாளம், பாடல் எடுக்கும் முறை, தாம்பழகிய பாரம்பரிய அண்ணாவியாரின் பழக்குதல் பற்றிய தெளிவுகள் போன்றவை பற்றிக் குறிப்பிடுவர். அவ்வாறே பக்கீர்பைத்தில் தேர்ச்சிபெற்ற கலைஞர் அதுபற்றிப்பாடிக் காட்டி உரையாடுவர். கோவலன் கூத்துக் கலைஞர்களும் தமது ஆட்ட அனுபவங்களை முன்னிலைப்படுத்துவர். வேட சமூகத்தைச் சேர்ந்தவர் அத் தெய்வ அழைப்பு, பாடுதல், பறை அடித்தல் முதலான ஆழமான புலமைத்துவத்தினை முன்மொழிவர். இவ்வாறே ஏனைய கலைஞர்களும் தமது அனுபவங்களையும் அதில்தாம் கொண்டுள்ள நிபுணத்துவத்தையும் தாமாகக் கருத்துரைக்கும்போது வரும் மனங்களின் மகிழ்வே இங்கு முக்கிய கொண்டாட்டங்களாகும். அந்தச் சந்தர்ப்பத்தில் உரையாடும் போதே பாடக் கூடியவர்கள் பாடுவர்,ஆடக்கூடியவர்கள் ஆடியே தமது விளக்கத்தை முன்மொழிவர் இது பாரம்பரியக்கலை ஆளுமைகளிடம் நிலவும் முக்கிய பண்பாகும்.

பாரம்பரியக்கலைஞர்களின் கொண்டாட்டங்களில் மிகமுக்கியமாக வெளிப்படுத்தப்படுவது பல பிரதேச பண்பாட்டுத் தளங்களில் இருந்து வரும் கலைஞர்களின் பிரச்சினைகள்,அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்போன்றவற்றை உரையாடும் சந்தர்ப்பம் இதில் கொடுத்தமை யாகும். இன்றைய நவீன தொழிநுட்பயுகத்தில் பாரம்பரியக்கலைகள் அரிகிப்போயுள்ளது, அழகற்றது என கட்டமைக்கப்பட்டுள்ள நிலைமை

ஏற்படுகின்றது. அத்தோடு தொடர்ச்சியாக கலைச் செயற்பாட்டை முன்னெடுத்துவரும் பாரம்பரியக் கலைஞர்களுக்குஉள்ளார்ந்த, புறவயமாக நிலவுகின்ற பிரச்சினைகளை அவர்களே கலந்துரையாடுவர். அப்போது அவர்களுக்குள்ளே பிரச்சினைக்குரிய தீர்வை அறிந்துகொள்வதற் கான சுய சிந்தனை வெளிப்பாடும் இந்த சந்தர்ப்பத்தில் வலுப்பெறும். அவ்வாறே தொடர்பு சாதனங்களின் தாக்கம், புத்திஜீவிகளின் கருத்தியல் ரீதியான கட்டமைப்பு, உலகமயமாக்கலின் மூலமான முதலாலித்துவ ஆதிக்கம், கற்றல் சூழலில் இதற்கென விதிக்கப்படும் கூற்றுக்கள் போன்ற பல சவால்கள் பற்றி பேசப்படும். இந்த சந்தர்ப்பத்தில் ஏனைய கலைஞர் களுக்கும் அவை படிப்பினையைத்தரக் கூடியதாக அமையும்.

பாரம்பரியக்கலைகளின் முக்கியத்துவம் உணரப்பட்டு இந்த உலகமய மாக்கல் சூழலில் மகிழ்வைக் கொடுத்து கொண்டாடுவதற்கு கிராமப்புறங் களில் பல ஆற்றுகைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மட்டக் களப்பில் இந்தப்போக்கு அதிகம் உண்டு. தனியன்களாக வாழ்ந்து தொழிலில் ஈடுபடும் ஆற்றுகையாளர்கள் தாம் சமூகத்தை இணைப் பதற்கும், மனித உறவுகளைப் பரிமாறுவதற்கும் கூத்துக்களைத் தொடர் களரி அடித்தல் மூலம் முன்னெடுத்து அரங்கேற்றும் செயற்பாடு நிலவு கின்றது. வழமையாக ஆடி வரும் கிராமங்கள் தவிர்ந்த ஏனைய கிராமங்களில் சிறப்பாக இதனைக்காணலாம். குறிப்பாக தன்னாமுனையில் சுமார் 42 வருடங்க ளுக்குப்பிறகு ஞானபுத்திரன் எனும் வடமோடி கிறிஸ்தவக் கூத்து குறிப்பாக இளம் சமூகத்தினர் ஒன்றுசேர ஆடப்பட்டது. களுவண்கேணியில் 13ம்போர் வடமோடிக் கூத்து மக்கள் திரலாக ஒன்றிணைய அரங்கேற்றிக் கொண்டாடினர். காயங்கேணியில் மிக நீண்ட காலத்திற்குப் பிறகு 14ம் போர் வடமோடிக் கூத்து நிகழ்த்தப்பட்டது. கரவெட்டியில் பூதத்தம்பி விலாசம் கூத்து ஆடப்பட்டது. இதற்குக் காரணம் இதன் தேவையும் இருப்பும் மிகவும் அவசியமானது என உணர்தமையே ஆகும். ஆனாலும் அவற்றை முன்னெடுப்பதில் புலப்படும் சவால்களையும் இங்கு அவர்களாலே வெளிக் கொணர வைப்பதும் முக்கிய நிகழ்வாக இடம்பெறும்.

மடை வேர்களினதும் மனங்களினதும் கொண்டாட்டம் எனும் நிகழ்வில் பல்பண்பாட்டிற்குரிய கட்டமைப்பு நிலவுகின்றது. பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் மண்சார்ந்த கலைஞர்கள் நிலத்தடி நீரைப்போல் தாமாக வளர்ந்து வரும் அந்த ஆளுமைகளின் ஒன்றிணைவும் ஊடாட்டமும் காத்திரமாக இங்கு நிகழும். குறிப்பாக பல்வகைமை ஒன்றிணைவைமட்டக்களப்பில் இருந்துவரும் 56 கலைஞர்களிடம் அதிகம் காணலாம். வேடர் சமூகத்தினர், பறங்கியர் சமூகத்தினர், அருந்தியர் சமூகத்தினர், பறையர் சமூகத்தினர், வனக்குறவர் சமூகத்தினர்,முஸ்லீம் சமூகத்தினர் போன்றோர் ஒன்னிணைந்து தமது இடையூடாட்டங்களை மேற்கொள்வதும் அவர்களுக்கு மதிப்பளித்தலும் இடம்பெறும். சாதி, மதம், இனம் என்ற வேறுபாடு இன்றி தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவது முன்னிலைப்படுத்தப் படுகின்றது.

சம கால சமூகத்தின் தேவையான பால், சாதி ரீதியான ஒடுக்குமுறை நீக்கல் தொடர்பான கலந்துரையாடல்களும் பிரக்ஞைபூர்வமாக முன்னெடுக்கப்படும். பாரம்பரியக் கலைகளில் பெண், ஆண் தொடர்பான பால் நிலை அசமத்துவம், சாதி ரீதியான ஒடுக்குதல் போன்றவை பல கோணங்களில் இடம் பெறுகின்றது. ஆற்றுகையின் போது பால், சாதி போன்றவை உதாரணத்திற்காகவும், விரசமான பேச்சுக்காகவும் தமக்கேற்ப கையாளப்படுவது வழக்கமாக உள்ளது. இதன் கட்டமைப்பையும்,இதனுள் நிலவும் அதிகாரத்தையும் கேள்விக்குட்படுத்தி உரையாடல் மூலம் கொண்டுவருவதோடு பாரம்பரியக் கலைஞர்களை அதில் உணர வைத்தலும் ஒடுக்கு முறையினை நீக்குவது தொடர்பான தெளிவையும் கொடுக்கும் ஆரம்ப முயற்சியாகவும் இவை அமையும்.

இந்தக் கொண்டாட்ட நிகழ்வில் திருகோணமலையில் பிரதேச ரீதியான ஆற்றுகைகள் ஆச்சரியம் ஊட்டக்கூடிய வகையில் 5 இடங்களில் நடைபெறும். கடற்கரை ஓரத்தில் பாரம்பரிய வாத்திய இசை நிகழ்வு இடம்பெறும்.குளக்கோட்டன் தோப்பு முன்றலில் பறங்கியர் இசை நிகழ்வு, முஸ்லீம்களின் பொல்லடி(களிகம்பு), வாள் வீச்சு, பறைமேளக் கூத்து

போற்றவையும் இடம்பெறும். சிவானந்த தபோவனத்தில் அமைக்கப்படும் களரியில் பிரதேச தனித்துவ வெளிக் கொணர்கையை முன்னிலைப் படுத்தும் கூத்துக்கள் நிகழ்த்தப்படும்,சடங்குப்பந்தல் மற்றும் காட்சிக் கூடத்திற்கு முன்பாக சில ஆற்றுகைகள் முன்னிலைப்படுத்தப்படும். இவ்வாறே இந்து கலாசார வளாக மண்டபத்தில் மகிடிக் கூத்தும், காமன் கூத்தும் நிகழ்த்தப்படும்.

இந்தக் கொண்டாட்டத்தில் காட்சிப்படுத்தல்களும் முக்கிய இடம் வகிக்கின்றது. வேடர் சமூக சடங்குப்பந்தல்கள்,தமிழரின்தனித்துவ கட்டிட அமைப்புக்கள், களரி, தோரணம், பாரம்பரிய பொருட்கள் கொண்ட காட்சிக்கூடம் போன்றவைகளும் சிறப்புற அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த விழா தொடர்பான ஒழுங்கமைப்புக்கள் கலாநிதி சி .ஜெயசங்கரின் தலைமையில் 09 பேர் கொண்ட ஒழுங்கமைப்புக் குழு ஒரு மாதத்திற்கு முன்பிருந்து ஆரம்பிக்கப்பட்டு தொடர் கலந்துரையாடல், சந்திப்பு மற்றும் செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பார்த்தல், கலைஞர்களைச் சந்தித்து தயார்படுத்தல், ஏனைய முகாமைத்துவ வேலைப்பாடுகள் போன்றவை முன்னெடுக்கப்பட்டன. வெறுமனே ஒரு இடத்தில் இருந்து கொண்டே இவை முன்னெடுக்கப் பட்டவை அல்ல. ஒவ்வொரு விடயமாக மிகவும் திட்டமிட்டு இடம்பெற்றது. இதன் மூலமான “செய்து கற்றல்” மிகவும் பயன் தரக் கூடியதாக அமைந்தமையானது எமது ஆளுமை விருத்திக்கு உரமூட்டியது.

திரு சு.சந்திரகுமார்.

**ஒழுங்கமைப்புக் குழு.**

| | | |
|---|---|---|
| 1) | சி.ஜெயசங்கர். | - இணைப்பாளர். |
| 2) | அ.விமலராஜ். | - நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு |
| 3) | து.கௌரீஸ்வரன் | - சடங்கு, மலர்க்குழு |
| 4) | ஸ்ரீ.ஸ்ரீ வாகீசன். | - போக்குவரத்து, தங்குமிடம், உணவு |
| 5) | ந.நந்தகுமார். | - ஆவணப்படுத்தல் |
| 6) | கி.கலைமகள். | - மலர்க்குழு |
| 7) | சு.நிர்மலவாசன் | - காட்சிப்படுத்தல் |
| 8) | சு.சந்திரகுமார் | - களரி, தோரணம் |
| 9) | வி.கௌரிபாலன். | - செய்தி, விளம்பரம் |
| 10) | செ.சுந்தரேஸ் | - ஒலி, ஒளி ஒழுங்குபடுத்தல் |

**ஒழுங்கமைப்பு உதவியாளர்கள்**

1. ச.றொசானி
2. சி.ஜெயப்பிரதாப்
3. தே.கிரேசன்
4. கௌரிசங்கர்
5. கோகுலன்
6. ஜெயக்காந்தன்

**களரி, தோரண வடிவமைப்பாளர்கள்.**

| | | |
|---|---|---|
| 1. | சு.சந்திரகுமார் | - இணைப்பாளர். |
| 2. | மா. தியாகராஜா | - கூத்துக்கலைஞர். |
| 3. | மா.கந்தசாமி | - கூத்துக்கலைஞர் |
| 4. | ஏ.விசுவலிங்கம் | - கூத்துக்கலைஞர். |
| 5. | த.பேரின்பராஜா | - கூத்துக்கலைஞர். |
| 6. | வே.வாலசிங்கம் | - தோரணம் கட்டுபவர். |
| 7. | வை.ஏகாம்பரம் | - தோரணம் கட்டுபவர் |
| 8. | நா.கோகுலன் | - மாணவர் |
| 9. | த.ஜெயக்காந் | - மாணவர் |

நாங்கள் வாழ வேண்டும் இந்த பூமியில் என்றும்
நாங்கள் வாழ வேண்டும் இந்த பூமியில்

இயற்கை மடியினில் கூடுகள் கட்டி இயற்கை மகிழ்ந்திட
வாழ்வினை ஆக்கி
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழவேண்டும் -நாங்கள்
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழவேண்டும்

அன்பின் வழியிலே வாழ்வினைக் கூட்டி
வன்முறைற்ற வாழ்வினை ஆக்கி
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழவேண்டும்
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழவேண்டும்

துயர்களை எல்லாம் துச்சமாய் எண்ணி
தடைகளை எல்லாம் வெற்றிப்படிகளாய் மாற்றி
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழவேண்டும்-நாங்கள்
இணைந்து மகிழ்ந்து உயர்வு பெற்று வாழவேண்டும்



# மடை

## பாரம்பரியக் கலைகளின் திருவிழா

சிவானந்த தபோவனம், உப்புவெளிவீதி,
திருகோணமலை.

25,26,27 – ஒக்டோபர்– 2013 மு.ப.9.00 - பி.ப. 10.30

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.